# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 20 வெள்ளிக்கிழமை 03.05.2024 கதிர் 248







# இலங்கையில் ஊடகத்துறை இன்னமும் ஆபத்தில்!

## எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவிப்பு

**இலங்கையில் ஊடகத்துறை இன்னமும் ஆபத்தில் உள்ளது என்று எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.**

**சர்வதேச ஊடக சுதந்திர தினமான இன்று, 2024ஆம் ஆண்டுக்கான ஊடக சுதந்திரக் குறிகாட்டியை வெளியிட்டுள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு, இலங்கையை 150 ஆவது இடத்தில் பட்டியலிட்டுள்ளது.**

2➤

**REPORTERS WITHOUT BORDERS**
**FOR PRESS FREEDOM**




# இன்று உலக ஊடக சுதந்திர தினம்!

உலக ஊடக சுதந்திர தினமானது ஒவ்வொரு வருடமும் மே மாதம் 3ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. 1991ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பின் 26 ஆவது பொதுக் கூட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்ட "உலகின் சகல பிராந்தியங்களுக்குமான பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்துக்கானதும், ஊடக சுதந்திரத்தினதும் பாதுகாப்புக்கும் மேம்படுத்தலுக்குமான ஆணை" என்ற தொனிப் பொருளில் பரிந்துரைக்கப்பட்ட கட்டளையின் நிமித்தமாக இத்தினம் உருவானது.

1993ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் 3ஆம் திகதி "சர்வதேச பத்திரிகை சுதந்திர தினமாக" பிரகடனப்படுத்தப்பட்டது.

கொலம்பிய பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாசா என்பவர் 1986ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி அவரது அலுவலகம் முன்பாக வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரது படுகொலையின் பின்னரே பத்திரிகை சுதந்திரம் தொடர்பான பேச்சு உலகம் முழுவதும் வலுப்பெற்றது.

இவரின் நினைவாக இந்நாளில் ஊடக சுதந்திரத்துக்காக பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு ஆண்டுதோறும் யுனெஸ்கோ நிறுவனத்தினர் யுனெஸ்கோ-கிலெர்மோ கானோ உலக ஊடக சுதந்திர விருது வழங்கி கௌரவிக்கின்றனர். இந்த வருடம் 31வது உலக ஊடக சுதந்திர தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த வருடத்துக்கான இத்தினத்தின் கருப்பொருளாக "கிரகத்துக்கான ஒரு பத்திரிகை : உலக சுற்றுச்சூழல் நெருக்கடிகளின் மத்தியில் ஊடகவியல் துறை" என்பது அமைந்துள்ளது!

ஊடகச் சுதந்திரத்தின் அடிப்படைக் கொள்கைகளை மேம்படுத்துவதும், உலகளாவிய ரீதியில் ஊடகச் சுதந்திரம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்வதும், ஊடகவியலாளர்களின் சுதந்திரத் தன்மையின் மீது ஏற்படுகின்ற தாக்குதல்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதுவும், தமது கடமையின் பொழுது மரணித்த ஊடகவியலாளர்களுக்கு மரியாதை செலுத்துவதுவும், இத்தினத்தின் முக்கிய நோக்கங்களாகும்.


நன்றி: பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி / தூதுவர்


# லிட்ரோ, லாஃப் எரிவாயுக்களின் விலைகள் அதிரடியாகக் குறைப்பு



லிட்ரோ சமையல் எரிவாயு விலை இன்று நள்ளிரவு முதல் குறைக்கப்படும் நிலையில், புதிய விலைப்பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 175 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 3 ஆயிரத்து 940 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 70 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 2➤

# தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் ரூ.1700 ஆக அதிகரிப்பு என்பது பொய் வாக்குறுதி!

## அரசாங்கம் மக்களை ஏமாற்றுகின்றது என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல



தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக கூறி மக்களை ஏமாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சம்பள அதிகரிப்பு தொடர்பில் தோட்டக் கம்பனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் கூட்டு ஒப்பந்தம் காணப்படுவதாகவும், அந்த உடன்படிக்கையின் பிரகாரம் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமாயின் தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறல்லாமல், 2➤

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவாரா ரணில்?

## உத்தியோகபூர்வ அறிவிப்பு எப்போது வெளியாகும்?

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டது என்ற உத்தரவாதத்தை சர்வதேசம் வழங்கிய பின்னரே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என அறியமுடிகின்றது.

எதிர்வரும் ஜூன் நடுப்பகுதியில் வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கை மீண்டுவிட்டது என்ற அறிவிப்பு வெளிவரவுள்ளது எனவும் தெரிய வருகின்றது. அதுவரை நலன்புரித் திட்டங்களை முன்னெடுப்பது எனவும், முன்கூட்டியே தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை விடுத்தால் அது நலன்புரித் திட்டங்களைப் பகிரும் விடயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

தான் பொது வேட்பாளராகக் களமிறங்க உத்தேசித்துள்ளதால் வெளியில் இருந்துகூட பலரும் ஆதரவு வழங்கலாம் என்ற கருத்தையும் தனக்கு நெருக்கமானவர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளார். (அ)

## தோட்டத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருதலைப்பட்சமாக சம்பள அதிகரிப்பை மேற்கொள்வது சாத்தியமில்லை எனத் தெரிவித்த கிரியெல்ல, இரண்டு தடவைகள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக கடமையாற்றியவர் என்ற ரீதியில் இது தனக்கு நன்கு தெரியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் ஐக்கிய சக்தியும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கின்றது, ஆனால் தோட்ட நிறுவனங்களின் இணைக்கப்பாடு இல்லாமல் அரசாங்கத்தினால் ஒருதலைப்பட்சமாக சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள முடியாது. எனவே, இந்த உண்மையை தெரிந்துக் கொண்டே தான் மக்களை ஏமாற்றும் நோக்கில் அரசாங்கம் இந்த வாக்குறுதியை அறிவித்தது எனவும் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-09)

## லிட்ரோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆயிரத்து 582 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2.5 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 32 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 740 ஷரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லாஃப் சமையல் எரிவாயுவின் விலையும் குறைக்கப்படுகின்றது என்று லாஃப் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லாஃப் சமையல் எரிவாயுவின் விலை 275 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி அதன் புதிய விலை 3 ஆயிரத்து 840 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 5 கிலோகிராம் நிறையுடைய லாஃப் சமையல் எரிவாயுவின் விலை 110 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,542 ரூபாவாகும். (அ)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் ஊடக சுதந்திர விடயங்கள் 2009 ஆம் ஆண்டு வரை அந்த நாட்டில் காணப்பட்ட உள்நாட்டு யுத்தத்துடன் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு, தமிழர் போராட்டம் ஒடுக்கப்பட்டவேளை ஊடகவியலாளர்கள் பலருக்கு எதிராக இடம்பெற்ற இன்னமும் தண்டிக்கப்படாத வன்முறைக் குற்றங்களுக்கும் ஊடக சுதந்திரத்துக்கும் தொடர்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

220 இலட்சம் மக்கள் வசிக்கும் இலங்கையில் ஊடகத்துறை இன்னமும் ஆபத்தில் உள்ளது என்றும் எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக ஊடகத் தொழில்துறையினர் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர் என்று தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு, 2015 ஆம் ஆண்டின் பின்னர் எந்த ஊடகவியலாளரும் கொல்லப்படவில்லை என்றும், ஆனால் முந்தைய கொலைகளுக்குக் காரணமானவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

“இலங்கையில் ஊடகவியலாளர்கள் இன்னமும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்படுகின்றார்கள். அவர்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள். உள்நாட்டுப் போர் இடம்பெற்ற பகுதிகளுக்குச் செல்வதற்குச் சுயாதீன ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது” - என்று எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# விலைப்பட்டியலுடன் சபாநாயகர் ஜனாதிபதியிடம் விபரங்கள்

எரிபொருள் விலை மற்றும், மின்சார கட்டணம் குறைக்கப்பட்டாலும், உணவு உள்ளிட்ட பொருட்களின் விலை வேகமாக அதிகரித்துள்ளமை குறித்து ஜனாதிபதியிடம் விபரங்களை முன்வைக்கவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள், மின்சாரம், எரிவாயு ஆகியவற்றின் விலை சிறிதளவு அதிகரிக்கும் போது, பொருட்கள் உணவு வகைகளின் விலைகள் வேகமாக அதிகரிக்கப்படுவதாகவும், அவற்றின் விலைகள் குறையும் போது மாத்திரம் மக்களுக்கு அந்த நிவாரணத்தை வர்த்தக சமூகத்தினர் வழங்குவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரெம-12)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசா வழங்கலை இந்திய நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளனவா?

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசா வழங்கலை இந்திய நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் இந்தியாவிலுள்ள நிறுவனங்களோ அல்லது இந்திய நிறுவனங்களோ அல்ல என கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனங்களின் தலைமையகம் வேறு இடங்களில் அமைந்துள்ளதாகவும், எனவே இது தொடர்பாக இந்தியாவை குறிப்பிடுவது அடிப்படை ஆதாரமற்றது எனவும் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

விமான நிலையத்தில் விசா வழங்கும் பணியை இந்திய நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளதாக சமூக ஊடகங்கள் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களில் தவறான செய்திகளும் கருத்துக்களும் காணப்படுவதாகவும் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித் துள்ளார். (ரெம-13)

# யாழ்ப்பாணத்தில் போராட்டம்!




*சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.*

*யாழ். ஊடக அமையத்தின் முன்பாக இன்றைய தினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் நடைபெற்றது.*

*யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் போராட்டத்தில் கலந்து கொண்டு, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கோசங்களை எழுப்பினர்.*

*அத்துடன், ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும், எனவும் கோரினர்.*

*அத்துடன், அரச அதிகாரிகள், அரச பலங்களைப் பிரயோகித்து ஊடகவியலாளர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி, அச்சுறுத்துவது உள்ளிட்ட செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் எனவும், ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.* *(01)*



மாலைக்கதிர்
Maalaikkathir



# யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் கலைச் சங்கமம் – இசை நடன விழா







தமிழ்நாட்டில் புகழ் பெற்ற பிரிட்ஜ் அக்கடமியின் இலங்கைக் கிளை நடத்திய கலை சங்கமம் - இசை நடன விழா கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் சிறப்புற இடம்பெற்றது.

பிறிட்ஜ் அக்கடமி என்பது இலங்கையில் உள்ள சங்கீத சபை போன்ற ஓர் அமைப்பு. பதிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஊடாக அவர்களது பாடத்திட்டத்தை அமுலாக்கி தரநிலைகளுக்கான பரீட்சைகளை நடத்துகின்றது.

இதன் இலங்கை இணைப்பாளராக விளங்குபவர் துரைரட்ணம் ஸ்ரீசுடரோன்.

நுண்கலைத் துறைசார்ந்து தமிழகப் பல்கலைக் ககழகங்களில் உயர்பட்டப்பட்டப்படிப்புகளுக்கான ஏற்பாடுகளையும் பிறிட்ஜ் அக்கடமியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் தமிழகத்தின் பல பாகங்கள் தவிர இலங்கை, மலேசியா சிங்கப்பூர் டுபாய் போன்ற இடங்களிலும் பிரிட்ஜ் அக்கடமியின் கிளைகள் இயங்கி வருகின்றன.

இலங்கையின் பல பாகங்களில் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் பிறிட்ஜ் அக்கடமியில் பதிவு பெற்ற ஆசிரியர்களிடம் கல்வி கற்கின்றனர்.

ஏறத்தாழ 10 மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்ற இந்த ஆற்றுகை நிகழ்வில் யாழ்ப்பாணம், கொழும்பு மட்டக்களப்பு கண்டி வவுனியா கிளிநொச்சி முதலிய மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கானோர் வருகை தந்து பங்கேற்றமை சிறப்பம்சம் ஆகும்.

இசை நடனம் என 17 ஆற்றுகைகள் மேற்கொள்ளப்பட டன. இந்நிகழ்வில் தமிழகத்தில் இருந்து பிரிட்ஜ் அக்கடமியின் நிறுவுநர் மற்றும் தலைவர் நரசிம்மன் ரகுராமன், இசைத்துறைத் தலைவர் முனைவர் என். சாரதா, பரதநாட்டியத்துறைத் தலைவர் முனைவர் எஸ். சுமதி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதம விருந்தினர்களாக இந்தியத் துணைத்தூதர் சாய்முரளி, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், பதில் அரச அதிபர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். சிறப்பு விருந்தினர்களாக மூத்த சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவன், கலைஞர் வேல் ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் வலிகாம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீதேவி கண்ணதாசன் யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் அகல்யா ராஜபாரதி தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் விஜிதா சுனில் ஆரியரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொழும்பில் இருந்து 300 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் மட்டக்களப்பில் இருந்து 150 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆற்றுகைகள் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட டிருந்தன. நேரக்கட்டுப்பாட்டுடன் அரங்காற்றுகை செய்யப்பட்டன. நிகழ்ச்சிகளை ஆரணி மற்றும் மொறாயஸ் ஆகிய பிரபல வானொலி அறிவிப்பாளர்கள் நேர்த்தியாக தொகுத்து வழங்கினர்.




## தொழிற்பயிற்சி பயிலுனர்களுக்கு நூகர்வோர் விவகார விழிப்புணர்வு!



(அஸ்லம் எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிந்தவூர் மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தின் பயிலுனர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் (29) தொழிற் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி எஸ்.அப்துல் நாஸர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளான இஷட்.எம். ஸ ாஜீத் மற்றும் என்.எம். நூஸ்கி ஆகியோர் கலந்து கொண்டு வியாபார நடவடிக்கைகளில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து பயிலுனர்களுக்கு தெளிவுபடுத்தினர்.

இதன்போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள், தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்கக் கட்டுப்பாட்டு விலை, நுகர்வோர் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் மற்றும் முறைப்பாடு செய்வது சம்பந்தமாக தெளிவுபடுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் தொழிற் பயிற்சி நிலையத்தின் விரிவுரையாளர்கள் சிலரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

# தெல்லிப்பழை 'கிட்ஸ் பார்க்' மாணவர்களின் கல்விக் கண்காட்சி 03.05.2024










## மகளைக் கொடூரமாகத் தாக்கி வீடியோ எடுத்த தந்தை கைது

பலாங்கொட பெட்டிடிகல பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர், தனது மகளைக் கொடூரமாகத் தாக்கி வீடியோவை சமூக ஊடகங்களில் வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மனைவி ஒன்பது மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டுக்குச் சென்றிருந்த நிலையில், சிறுமியைக் கவனித்துக்கொள்வதற்காக மேற்படி நபரிடமும் பெற்றோரிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே மேற்படி சிறுமி அவரது தந்தையால் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ள நிலையில், சிறுமி பலாங்கொட ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட தந்தியை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொடை நீதிவான் ஹெஷானி ரொட்ராகோ இன்று உத்தரவிட்டுள்ளார். (அ)

## ஐஸ் போதைப் பொருளுடன் பரந்தனில் இருவர் கைது!

*யாழ்காவல்துறைப்போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக, கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பரந்தன் நகரப் பகுதியில் இன்று காலை ஐந்து முப்பது மணி அளவில் ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபரரகளிடம்இருந்து11கிராம்நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் பொலிசாரால் பறிமுதல்செய்யப்பட்டுள்ளதுடன்இரண்டு சந்தேக நபர்களும் கிளிநொச்சி காவல் நிலையத்தில் தடயப் பொருட்களுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.*

*இச்சம்பவம்தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் இரண்டு சந்தேக நபர்களையும் கிளிநொச்சி நீதிமன்றல் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.*

*(02)*

## டீசலின் விலை குறைந்தாலும் பஸ் கட்டணம் தற்போதைக்கு குறைக்கப்பட மாட்டாது!

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

டீசலின் விலை குறைந்த போதிலும், பஸ் கட்டணம் தற்போதைக்கு குறைக்கப்பட மாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் டீசல் விலை 34 ரூபாவினாலும் பெப்ரவரி மாதம் 05 ரூபாவினாலும் அதிகரித்த போதிலும் அப்போது பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் ஷஷி வெல்கம தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போது டீசல்விலை குறைந்தாலும், பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். எதிர்வரும் ஜூலை மாதம் தேசிய கொள்கையின்படி பஸ் கட்டணங்களில் திருத்தம் செய்யப்படும் வரை தற்போதைக்கு பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, டீசல் விலை 30 ஷரூபாவால் குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## O/L பரீட்சை திங்கள் ஆரம்பம்

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 15 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும் . 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சாத்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

பாடசாலைகளில் இருந்து 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 விண்ணப்பங்களும், தனியாரிடமிருந்து 65 ஆயிரத்து 331 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. 3 ஆயிரத்து 521 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் உபகரணம் உள்ளிட்ட பரீட்சை நிலையங்களுக்குக் கொண்டுவருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள உபகரணங்கள் கொண்டுவரப்படும் விகிதம் அதிகரித்துள்ளது. எனவே, இம்முறை கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்கு பரீட்சை எழுதத் தடை விதிக்கும் இந்த நடவடிக்கையில் எவரும் ஈடுபடக்கூடாது என்று பரீட்சைகள் திணைக்களம் கேட்டுள்ளது. (அ)

# கிண்ணியாவின் மிகப் பின்தங்கிய 5 பாடசாலைகள் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தினால் பயன் பெற்றன





(ஹஸ்பர் ஏ.எச்)

அனைவருக்கும் சமத்துவமான, தரமான கல்வினை உறுதி செய்யும் தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டத்தினை முஸ்லிம் எய்ட் சிறிலங்கா, அதன் தாய் அமைப்பான முஸ்லிம் எய்ட் யுகே இன் நிதியுதவியுடன் தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய வலயங்களில் ஒன்றான கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு 2021ம் ஆண்டு தொடக்கம் முன்னெடுத்து வருகின்றது.

2023-24 ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட 3ம் கட்ட கல்வி மேம்பாட்டுச் செயற்பாடுகளின் காரணமாக, கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் ஈச்ச நகர் மதீனா வித்தியாலயம், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவின் நடு ஊற்று சக்கரிய்யா வித்தியாலயம், வான்எல புகாரி மகா வித்தியாலயம், பைசல் நகர் அல் இர்பான் கனிஷ்ட வித்தியாலயம், கச்சக்கொடி தீவு அந்-நஜாத் மகா வித்தியாலயம் போன்ற அதி கஷ்டப் பிரதேச பின்தங்கிய பாடசாலைகள் உதவிகளைப் பெற்றன.

தற்காலிக வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், மலசல கூட வசதிகள், விளையாட்டு உபரணங்கள், மாணவர்கள், ஆசிரியர்களுக்கான தளபாடங்கள், கட்டட திருத்தப் பணிகள், ஆய்வு கூடத் திருத்தப் பணிகள் போன்ற பயன்பாடுகளை அப்பாடசாலைகள் பெற்றுக் கொண்டன. பூர்த்தி செய்யப்பட்ட பணிகளை பாடசாலை நிர்வாகம் மற்றும் மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள் நேற்றும் இன்றும் கிண்ணியா வலயக் கல்வி அலுவலகப் பணிப்பாளர் ஏ.எல்.சிராஜைப் பிரதம அதிதியாகக் கொண்டு நடைபெற்றன.

# மல்வத்தை பிராந்திய கணித விஞ்ஞான உயர்தர மாணவர்களுக்கு கல்வி உதவி!

( வி.ரி. சகாதேவராஜா)

மல்வத்தை பிராந்திய உயர்தர கணித விஞ்ஞான மாணவர்களின் மேலதிக கற்றலுக்கான இரு வருட உதவியை அவுஸ்திரேலியாவின் இணைந்த கரங்கள் அமைப்பு வழங்க முன்வந்துள்ளது .

"Aim to excellent out come" என்ற இவ் வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் மல்வத்தை விபுலானந்த தேசிய பாடசாலையின் அதிபர் திருமதி கௌசல்யா கணேஸ்வரன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் ஏ.காந்தனும், கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம் எம் எம். ஜெளபர், ஆசிரிய ஆலோசகர் ஹபீப் மற்றும் மேலதிக வகுப்பு ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

மல்வத்தை வீரமுனை பிராந்தியத்தில் கணித விஞ்ஞான பாடத்தை கற்கும் 12 மாணவர்களுக்கான இரு வருட பிரத்தியேகமான விசேட வகுப்புகள் நடாத்த நிதி உதவி அங்கு வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.






## நரக்களி பாடசாலையின் ஆரம்பப்பிரிவில் இடம்பெற்ற



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி நரக்களி றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தின் தரம் 1 தொடக்கம் 5 வரையான ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (02) பாடசாலையின் அதிபர் அமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

பால் பொங்கும் நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்ட புத்தாண்டு நிகழ்வில் முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் அவுருது குமரயா, அவுருது குமாரி , யானைக்கு கண் வைத்தல் போன்ற பாரம்பரியப் போட்டிகள் இடம்பெற்றன.

இப்புத்தாண்டு நிகழ்வுகள் ஆரம்ப பிரிவு பகுதி தலைவர் திருமதி அஜந்தா, வகுப்பாசிரியர்களான பேகம், சகன்யா, பஸ்னா மற்றும் நயோமி ஆகிய வகுப்பாசிரியர்களின் வழிப்படுத்தலின் கீழ் சிறப்பாக இடம்பெற்றதாக பாடசாலையின் பிரதி அதிபர் மரிய லாவுஸ் மேர்சி தெரிவித்தார்.

# திருகோணமலை மாவட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கான செயலமர்வு





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கான மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நேற்று (02) வியாழக்கிழமை இடம்பெற்றது. வாழ்வுரிமை, மனித உரிமைகள் மையம், மனித உரிமைகள் முதலுதவி மையங்கள் ஆகியன இணைந்து இச்செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தன.

இச் செயலமர்வின் போது மனித உரிமைகள் என்றால் என்ன? மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் என்ன? மனித உரிமை மீறப்படும் போது எடுக்கப்பட வேண்டிய மாற்றுவழி என்ன? உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. செயலமர்வில் திருகோணமலை மாவட்டத்தில் மனித உரிமை செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற ஊடகவியலாளர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பினர், காணால் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கல்முனை சாஹிரா கல்லூரிக்கு புதிய நிர்வாகக் கட்டிடம் அமைப்பு

(சர்ஜ/ன் லாபீர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலைக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியால் முதற் கட்டமாக சுமார் 50 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் புதிய கேட்போர் கூடத்துடனான நிர்வாகக் கட்டிடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இது விடயமாக அண்மையில் பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்

ஹரீஸ், அம்பாறை மாவட்ட பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர் ஆகியோர் பாடசாலைக்கு சென்று மதிப்பீட்டு அறிக்கையும், சத்தியவள செயற்பாடுகளையும் பார்வையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.










# பிரான்ஸ் தூதுவரை சந்தித்த மனோ எம்.பி.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனுக்கும், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜோன் பிரான்கொயிஸ் பெசட்டுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பில் உள்ள பிரான்ஸ் தூதுவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, பிரான்ஸ் தூதுவருடன், தூதரக துணைத் தலைமை அதிகாரி திருமதி மாரி நொயெல்லா தூரிசும் உடன் இருந்தார்.

இதன்போது, இலங்கைக்குப் பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவிகள் இலங்கையின் தமிழ் மக்களுக்கும், பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு மனோ கணேசன் பிரான்ஸ் தூதுவரைக் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில், மனோ கணேசன் எம்.பி. பின்வருமாறு கூறியுள்ளார்.

"பிரான்ஸ் தூதுவர் ஜோன் பிரான்கொயிஸ் இல்லத்தில் பிரானஸிய விருந்தோம்பல் ஆசாரத்துடன் கூடிய பயனுள்ள சந்திப்பு நிகழ்ந்தது. தெற்கு உலக நாடுகள் தொடர்பில் பங்களிப்புகளை வழங்க பிரான்ஸ் இன்று உறுதியாக இருப்பது என்னைக் கவருகின்றது. ஜனாதிபதிகள் மக்ரோன், ரணில் ஆகியோர் மத்தியிலான பேச்சுகளின் பின் இலங்கைக்குச் சமுத்திரதுறை தொடர்பில் உதவ பிரான்ஸ் ஆர்வம் கொண்டுள்ளது என்று தூதுவர் மற்றும் தூதரக துணைத் தலைமை அதிகாரி ஆகியோர் என்னிடம் கூறினர்.

பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவிகள் இலங்கையில் தமிழ் மக்களுக்கும், பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு நான் கோரினேன்.

நமது மக்கள் தொடர்பில் விசேட வேலைத்திட்டங்களை முன்மொழிந்து முன்னெடுப்பது தொடர்பில் தொடர்ந்து பேச்சுகள் நடத்துவது பற்றியும் கலந்துரையாடினோம்." -என்று மனோ எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

(அ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.05.2024இல் வெளியிடப்பெற்றது.